1990 ஏப்ரல் 5]

அதாவது மனித சேய் இணைப்பு திசு. இந்த மூலப் பொருள் தமிழ் நாட்டில் மிக அதிகமாக கிடைக்கிறது. ஆகவே, ஒரு டாக்டர் குழுவை கியூபா நாட்டிற்கு அனுப்பி, மருந்து தயாரிப்பு முறையை அறிந்து வரச் செய்து, தமிழ் நாட்டில் அந்த மருந்தை தயாரித்து மிகச் சுலபமாக விற்பனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இந்த மருந்தின் பலன் குறித்து இன்னமும் முழுமையாக அறிஞர் குழுவால் முடிவு செய்யப் படாத நிலையில், அதுபற்றி ஆய்வு செய்கிற செயற்குறிப்பு அரசிடம் இல்லை. அப்படி ஒரு நிலை ஏற்படுமானால், அது முழு மையாக குணப்படுத்தும் என்று அறிஞர் உலகம், மருத்துவர் உலகம் ஏற்றுக்கொள்ளுமானால், அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

பணியில் இருக்கும்போது மரணமடைந்து விடும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப்பணி.

*1006 திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பணியில் இருக்கும்போது மரணமடைந்துவிடும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப்பணி வழங்குவதில் திருமணம் முடிந்த பெண்களுக்குப் பாரபட்சம் காட்டக் கூடியவகையில் அரசு ஆணை அமுலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அக்குறையை நிவர்த்திக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) தற்போதுள்ள அரசு ஆணைகளின்படி மணமாகாத பெண்களுக்குத்தான் கருணை அடிப்படையில் வேலை கொடுக்கப்படுகின்றது.

(ஆ) இப்பொருள் குறித்து தற்பொழுது அரசின் பரிசீலனையில் ஏதுமில்லை.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, அரசுப் பணியில் இருக்கிற நேரத்தில் மரணம் அடையும் அரசு ஊழியர்களுடைய வாரிசுகளுக்கு வேலை அளிக்க வேண்டும்

என்பது அரசாங்கத்தினுடைய கொள்கை, திட்டம். அப்படி இருக்கிறபோது மணமான காரணத்தால், அதிலும் குறிப்பாக இப்போது பெண்கள் வாரிசு உரிமைச் சட்டம் நிறைவேற்றியதற்கு பின்னால் அந்தப் பெண்களுக்கு வேலை தராமல் இருப்பது முறையா? எனவே, வேலை தருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவர் அவர்களே, வாரிசுதாரர் அடிப்படையில் பணியில் இருக்கிறபோது இறந்துவிட்ட அரசு ஊழியர்களின் மனைவியோ அல்லது மகனோ அல்லது மணமாகாத மகளோ என்றுதான் இருக்கிறது. மணமாகிவிட்டாலே அவர் வேறு குடும்பத்தைச் சார்ந்தவர் என்ற காரணத்தாலோ என்னவோ அவர்களுக்குத் தருவதில்லை. இந்த மூன்று பேர்களுக்கு மட்டும்தான் தருவதாக இதுவரையில் நடைமுறையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கோரிக்கை அரசின் பரிசீலனையில் இல்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் ''வினாக்கள்-விடைகள் நேரம்'' சற்று நீட்டிக்கப்படுகிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலைமை முன்பு இருந்திருந்தால், சரி, சென்ற ஆண்டு புதிதாக இந்தப் பேரவையில் சட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இந்த அரசாங்கம் சட்டம் நிறைவேற்றியிருக்கிறது. அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னாலும், அவர்கள், அந்த மணமான பெண்கள் வாரிசுதாரர்களாக கருதப்படமாட்டார்கள் என்று சொல்வது எந்த நியாயத்தின் அடிப்படையிலே அப்படிச் சொல்லப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கடந்த வருடம் இதுபோன்ற சட்டத்தை இயற்றியிருப்பதாகச் சொல்கிறார்கள். அதைப் பற்றிய விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. அந்தக் குறிப்பை அறிந்து, அந்தச் சட்டம் இயற்றப்பட்டு இருக்குமானால், அவர்களுக்கும் வேலை தருவதிலே அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு நிறைவேற்றியிருக்கிற சட்டம், பெண்களுக்கும் பெற்றோர்களுடைய சொத்தில் உரிமை உண்டு என்று அந்தச் சட்டமே தவிர, வேலை கொடுப்பதற்கான சட்டம் அல்ல.